*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka. under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 20th MAY, 1983 No.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

FOR ADVERTISEMENTS
*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## Visit to Jaffna of Anglican Church Team

A delegation from the Anglican Church, visited Jaffna during the first week of May this year, to understand and assess, according to news reports, the political atmosphere prevailing in Jaffna. The team included Rev. Patrick Fernando, Rev. Eardley Mendis, Rev. Ashley Perera, Rev. D. P. J. de Silva and Rev. L. S. J. de Silva.

The team called on the Leader of the Opposition on 6-5-83 and also toured many rural areas and met people at the grass root level.

Preaching on Sunday at St. John's Church, Chundikuli, a member of the delegation is reported to have said in the course of the sermon:-

> "I believe that out of all the institutions in the land, the Christian Church is in the best position to give the lead to build a united Sri Lanka today.
>
> It is because that out of the four major religions in our country, Christianity alone embraces within itself people from every ethnic group where as every other religion draws its adherents from a particular ethnic group only."

## The Jaffna Local Polls and after

*A Rehabilitation Committee* consisting of the Acting Director of Social Services, Mr. K. Gengatheron, the Assistant Government Agent, Mr. S. Manicavasagar and the Grama Sevaka of the Kantharmadam area, Mr. T. Thalayasingham has been appointed to take steps to rehabilitate the people (estimated at over 850) rendered homeless by the incidents following the local polls on 20-5-83.

One hundred and sixty nine dwellings (of which over a hundred were wattle and daub houses) were burnt down. 36 vehicles were also burnt. The homeless people have been housed at the Government Tamil School at Nallur. Rs. 750 will be paid immediately to every low-income family in addition to dry rations.

*An Inquiry Unit* of the police headed by A. S. P., Jaffna Mr. M. A. Majeed will have two Inspectors of Police and two sub. Inspectors. The Unit will record statements from affected persons, assess the damages and will submit a report to the D. I. G., Northern Range within two weeks.

## Advanced Level (August) Examination

A total of 144,00 students will appear for the G. C. E. (AL) August Examination this year. Of this number, 94,700 are school candidates while 49,700 are private candidates.

Last year 160,000 appeared for the August examination.

## Jaffna Churches Observe Asia Sunday

On the 15th May (Sunday before Pentecost), Protestant Churches in Jaffna conducted the morning service on the theme, 'Jesus Christ, the Life of the World'; The Service Order was prepared by the Singapore office of the CCA, translated into Tamil by the CLS Madras, and distributed to the churches by the Jaffna Christian Union.

The special prayers of Intercession included those for the disinherited children of the world, for the victims of Tourism, for those who are denied fundamental human rights and for international under standing and fresh awakening on the subject of the piling of nuclear weapons at the cost of development.

*The Jaffna Christian Union* conducted a united Service at St. Peters Jaffna at 5 p. m. on 15-5-83. The President of the JCU, Mr. J. G. Arasaratnam led the Service Prayers were offered by the Rev. H. R. S. Jeyachanran, Chairman of the Methodist Synod and the Ven. S. D. Horshington, Archdeacon of Jaffna. Messrs K. Jeyarajah, Sam Sathaseevan and R. S. Ariaratnam read the Bible Lessons.

Mr. S. Jebanesan, of the staff of Jaffna College preached the sermon. He chose as his text:- Revelations xxii (1-2). He dwelt on the role that Churches in the Third World have to play in the Asian context of political unrest economic instability and moral degradation. The challenge of the Church is to be an agent of God's mercy and grace in providing 'life' for the teeming millions in Asia who are denied the basic amenities of human existence.

The Uduvil Girls' College Choir, rendered some choice Asian hymns from Japan, China, the Phillipines and Indonesia. The choir also led in the congregational singing of W. S. Senior's Hymn for Ceylon (in Tamil).

## The Electronic Church

Does religious broadcasting bring people into the Church or does it keep them away?

A two year study undertaken by the Annenberg School of Communications in Pennsylvania and the Gallup Organisation is seeking to answer this question and other questions related to religious broadcasting.

The Dean of Annenberg School George Gerbner, says that those who watch television, a substantial amount of time, look at reality differently from those who watch television less.

Questions raised about broadcasting the gospel include the theology of radio and television "congregation", whether the whole gospel can be proclaimed through the media and whether these media can be used for evangelism. There are vigorous defenders of all views.

The two year study is being funded by 27 Christian organisations in USA.

## Hand Book for Teachers of Grade Ten (Christianity)

The Ministry of Education has recently published in SINHALA, a hand book to help those, teaching Christianity in the G.C.E. Ordinary Level Classes. This hand book was written by Mr. S. Jebanesan of Jaffna College and was translated into SINHALA by Mrs. Janaki Fernando of Methodist Girls College Colpetty. A Tamil version of this book will be released soon.

## A Service of Thanksgiving

A Service of Remembrance and Thanksgiving for the life and work of the late Mr. K. J. Chelvarajan of Araly, was held at the Cathedral Church, Vaddukoddai on Monday 28th of March, at 7.30 a. m. Mr. Chelvarajan who died in the U. K. on December 19th 1982 was the only child of the late Rev. and Mrs. G. M. Kanagaratnam.

The Service was conducted by Rev. S. N. Sugunananthan the parish priest. The Bishop Rt. Rev. D. J. Ambalavanar preached the sermon. The Church was filled to capacity with relatives, friends and many of his former students from all walks of life, who had come from fairly distant places to honour their departed 'guru' and friend.

The Service commenced with the solemn rendering of a 'Thevaram' by Mrs. Jeeva Ratnasabapathy. This was followed by the reading of lessons by two close relatives — Mr. G. N. Edwards and Dr. (Mrs.) A. C. Canagarajah. An anthem rendered by some members of the family. The Vaddukoddai Church Choir with Miss Shamaleni Brodie at the organ led the congregational music.

The Service ended with the pronouncement of Benediction by Rev. Sugunananthan.

A long procession led by Rev. J. J. Ratnarajah who carried the urn containing Mr. Chelvarajan's ashes proceeded to the church burial ground, where it were interned. Bishop S. Kulandran officiated at the service at the cemetry.

Mrs. Ranji Chelvarajan hosted all who attended the service at the Parish Hall, to breakfast.

Mr. Chelvarajan leaves behind, besides his dear wife Range, his rwo daughters Mrs. Suji Yogendran and Raji.

— *Cor.*

BOOK NOW !
'The ROBE'
-VIDEO-
STORY OF THE SOLDIER WHO FOUND NEW LIFE!

NEW LIFE FOR YOU!
A COMPLETE BIBLE COURSE

CHRISTIAN COMMUNICATIONS
UDUVIL
CHUNNAKAM(N.P.)
SRI LANKA.

## New Director of Education

*Mr. E. Murugaian,* Lecturer, Kopay Training College who was at one time attached to the Curriculum Department has assumed duties as Director of Education, Mullaitivu.

Mr. Murugaian who is both a Science as well as Arts Graduate of the Ceylon University has written serveral books and has been a regular contributor of poems to Tamil journals.

He succeeds as Director of Education Mr. V. Nalliah who has been transferred to the Ministy of Education.

## JDCSI Boards

**The Medical Board**

The Bishop; Medical Superintendent, Green Hospital; Medical Superintendent, Mcleod Hospital; Prof. J. B. Selliah; Dr. P. Arulanantham; Dr. K. E. Chandrapal; Dr. Robert G. Porter; Mr. P. J. Thambiratnam; Mr. A. Rajasingam; Rev. S. N. Sugunananthan; Dr. J. S. Navaratnam.

[The Hospital Secretaries are Honorary Members of the Board.]

*In brief*

- A Boeing 707 of Zambia's National Airways zoomed into the Katunayake Airport on Monday, the 16th of may at 8-20 a. m. creating history as the first airliner from the African continent to touch down in Sri Lanka.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 143 ] 20 – 5 – 1983 [ இதழ் 20


## புனித ஆவியானவரின் திருநாள்

கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பெருநாட்களில், புனித ஆவியானவரின் திருநாளாகிய பெந்தெகொஸ்தே பண்டிகை சிறப்புடைய தாகும். இத்திருநாளைத் திருச்சபையின் பிறந்த நாளாகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகின்றனர்.

கிறிஸ்து பெருமான் எல்லாம் வல்ல இறைவனை நம்முடைய அன்புள்ள தந்தையாகவும், அவரின் அன்பு பொதிந்த பிரசன்னம் நம்மவர்களுடன் இடையருதிருக்குமெனவும் வெளிப்படுத்தினர்.

புனித ஆவியானவர், இறைவன் நம்முள் வசித்து செயலாற்றி, நமக்குப் புத்துயிரளித்து புது ஊக்கத்தைக் கொடுத்து, பெருமகிழ்ச்சியுடன் இயேசு பெருமானின் திருவடிகளைச் சார்ந்து வாழச் செய்கிருர். திருச்சபைக்கும் உயிர்ப்பூட்டி வழிகாட்டி கிறிஸ்துவின் விருப்பத்திற்கு அமைத்து செயல்படச் செய்பவர் புனித ஆவியானவரே.

புனித ஆவியானவர் உறையும் ஆலயமாய் நாம் அமையவே கிறிஸ்துபிரான் நம்மைப் பாவத்திலிருந்து மீட்டார் (I கொ. 6:19). புனித ஆவியானவரின் துணையின்றி, நாம் இறைவனுக்கு மகிமையாக வாழவும் செயலாற்றவும் முடியாது. இயேசு கிறிஸ்துவை, நமது ஆண்டவரெனவுங் கூறமுடியாது. (I கொ. 12:3).

ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தூய ஆவியானவரைப் பெற்ருலன்றி கிறிஸ்தவ வாழ்வை நிறைவாக வாழமுடியாது. ஆவியானவரைப் பெற, உண்மையான வாஞ்சையோடும் விசுவாசத்தோடும் நாம் இறைவனை வேண்டினுல், அவரை நமக்குத் தந்தருளுவது நிச்சயம் (லூ. 11:13).

இறைவன் நம்மில் நிலைத்திருக்கிருர்; அவருக்குகந்த வாழ்வை நாம் வாழ வேண்டும் என்பதை ஆவியானவரே நமக்கு அடிக்கடி நினைவூட்டுகிருர் (I யோ. 3:24). பாவத்தால் பாழடைந்துபோன நம்மை அவரே சீர்ப்படுத்துகிருர். இதனுல் நாம் தீயவனை எதிர்த்துப் போராடத்தக்க ஆற்றலைப் பெறுகிறேம். நாம் மீட்கப்பட்டோம்; இறைவனின் பிள்ளைகள் நாம் (ரோ. 8:15, 16). என்ற உண்மையைப் புனித ஆவியானவர் மூலம் அறிகிறேம.

இந்த உண்மையை அறிவதனுல் விசுவாசத்தில் உறுதி பெற்று, இறையரசை இவ்வுலகில் நிறுவ, எம்பெருமான் இடைவிடாது நடத்தி வரும் திருப்பணியில், அவரின உடன் ஊழியராக நாம் சேர்ந்து செயலாற்ற புனித ஆவியானவர் நமமை அழைககிருர்.

கிறிஸ்தவர்களாகிய நாம், அடிக்கடி நமது தீய செயல்களினுலும் எண்ணங்களினுலும் புனித ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறேம் (எபே. 4:30). அவர் இக்காலத்தில நடத்தி வரும் திருச்செயல்களை எதிர்த்துப் போராடுகிறேய. இதனுல் நம்மில் ஒளி வீசிய புனித ஆவியானவரை அணைத்துப்போடுகிறேம் (I தெச. 5:19). இறுதியில் ஆவியானவர் நம்மை முற்ருக விட்டு நீக்கிவிடுகிருர் (I சாமு. 16:14). இதன் விளைவாக நமது வாழ்வும் செயல்களும் உயர்ப்பற்றுவிடுகின்றன.

'கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவரு'மாகிய புனித ஆவியானவர், நம் நடுவே இன்று நிலவி வரும இருளையும ஒழுங்கினமையையும் நீக்கி மெய்வாழ்வை அளிக்க வல்லவர். ஆகவே அவரின வழியை நிதானித்தறிந்து. அன்பு நிறைந்த சேவைகளைச் செய்வதே நம் கடமை.

இன்று நம்மில் அனேகர் கருத்து இழந்த வாழ்வையே வாழ்கின்றனர், தம வாழ்வு எவ்வித நோககின்றி வெறுமையாய் இருக்கிறதென உணர்கின்றனர். இந்த மனப்பான்மை தொற்று நோய்போல் சமுதாயத்தில் பரம்புகிறது. இதன் விளைவால் சமுதாயம சீருலைந்து வருகிறது. எங்கு பார்ததாலும் தளர்ச்சியும் சோர்புமே காணப்படுகிறது. உலர்ந்த எலும்புகளைப போல் நம்மவர்கள் வாழ்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், ஒழுங்கின்மையைச் சீராக்கவும, இருளையகற்றி ஒளி மயமாககவும, வெற்றிடத்தைத் தம ஜீவனுல நிரப்பவும் வல்லவர் புனித ஆவியானவர், என்ற உண்மையை, நற்செய்தியாக நமது மக்களுக்கு அறிவிக்க நாம் அழைக்கப்படுகிறேம். இந்த அறிவிப்புப் பணியில் ஈடுபட்டு நமது சமுதாயத்தை மீட்கும் பணியில் புனித ஆவியானவருடன் சேர்ந்து பணியாற்றுவோம் வாருங்கள்.

## செய்தித் திரட்டு

**இலங்கை கெ. என். எச். சங்கம்: புதிய செயலர்**

ஆதரவற்ற சிறுவர் மத்தியில் நற்பணியாற்றி வரும் ஜெர்மன் நிறுவனமாகிய K. N. H. நிறுவனத்தின் இலங்கைக் கிளைச் சபைச் செயற் குழு. சமீபத்தில் கூடி, வவுனியா C. S. I. திருச்சபை ஊழியன் அருள்திரு. A. C. மதனராசா அவர்களை தமது சங்கத்தின் புதிய செயலராக நியமித்தது.

**ஆசிய கிறிஸ்தவ மன்றம்: புதிய செயலாளர் நாயகம்**

டாக்டர் பிரேமன் நயில்ஸ், ஆசிய கிறிஸ்தவ மன்றத்தின் துணைச் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இம்மன்றத்தின் இறையியல்துறைச் செயலராக அறிவர் நயில்ஸ் கடந்த சில ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தவர்.

இவரின் தந்தை அமரர் டி. றி. நயில்ஸ். கிழக்கு ஆசிய கிறிஸ்தவ மன்றத்தைத் துவக்கி வைத்து, அதன் முதற் செயலாளர் நாயகமாகப் பணியாற்றினுர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இம் மன்றமே பின்னர் 'ஆசிய கிறிஸ்தவ மன்றம்'' என அழைக்கப்படலாயிற்று.

**நவாலி திருச்சபை; புதிய ஊழியன் நியமன ஆராதனை**

நவாலி திருச்சபையின் புதிய ஊழியனுகிய திரு. கிறிஸ்டி T. ஞேபேட்ஸ் அவர்களின் நியமன ஆராதனை, இம் மாதம் 12ஆம் திகதி, (12-5-83) மாலை 5-00 மணிக்கு, நவாலி தேவாலயத்தில் பேராயர் அருட்பெருந்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் நடத்தப்பட்டது.

ஆராதனையின் பின், சபையார் அனைவரும் ஒன்று சேர்ந்து தேநீர் விருந்துபசாரனை நடத்தி, புதிய ஊழியனை வரவேற்றனர்.

**கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு நிலையம்: புதிய இயக்குனர்**

மருதனுமடத்தில் இயங்கி வரும் யாழ். கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு நிலையத்தின் புதிய இயக்குநராக, யாழ். கி. எஸ். ஐ. பேராயத்தின் ஊழியர்களில் ஒருவராகிய அருள்திரு. S. S. அருளம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1984 ஆம் ஆண்டு ஜனுவரி மாதம் தொடங்கி செயலாற்றத் தொடங்குவாரென அறிகிறேம்.

அமெரிக்கன் பிறஸ்பிதேரியன் திருச்சபையைச் சேர்ந்தவரும். கீழ்நாட்டுக் கலாச்சாரத் துறையில் பாண்டித்தியம் பெற்றவருமாகிய டாக்டர் நிச்சேர்ட் மன் என்பவர். கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு நிலையத்தின் துணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1984ஆம் ஆண்டு பெப்பிருவரி மாதம் தொடங்கி பணியாற்றத் தொடங்குவாரென அறிகிறேம்,

இந்நியமனங்களின் மூலம் இந் நிலையம் எதிர்வரும் ஆண்டுகளில் பயன் நிறைந்த பணிகளையாற்றி நமது சமுதாயத்தின் சிந்தனைக்கும் செயலுக்கும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தியானம்

### ஒரு ஆசிய வாழ்வின் அடையாளம்

ஒரு பாத்திரம் நிறைய அரிசி நடுவில் வைக்கப்பட்டிருக்கிறது. அனைவரும் அதிலிருந்து சிறிது சிறிது எடுத்துக்கொள்கின்றனர். அரிசியின் அடையாளத்தைப் பற்றிக் கீழே கூறப்பட்டுள்ளதைப் பற்றி சிந்தியுங்கள்.

அரிசி. ஆசிய மக்களின் வாழ்க்கையிலுள்ள உண்மைகளை நமக்கு நினைப்பூட்டுகிறது. அரிசி நம் அனைவருக்கும் முக்கியமான உணவு. சிலர் அதிக அளவில் அதைப் பெறுகின்றனர். சிலருக்குக் குறைவாகக் கிடைக்கிறது. கோடிக்கணக்கான ஆசிய மக்கள் பசியினுல் வாடுகின்றனர். அவர்களுக்கு கடவுள் உணவின் வடிவில் தோன்றுகின்ருர்.

நாம் அரிசியை விளைவிக்கும் இடம் நமது அடிப்படைச் சொத்தாகிறது. அதுவே நம்முடைய உழைப்பின் களமாகிறது. அனேகர் தமக்குச் சொந்தமில்லாத நிலத்தில் உழைக்கின்றனர். அவர்களின் உழைப்பின் பலன் பணமுள்ளவனை மேலும் பணக்காரனுக்குகிறது.

கடவுள் தமது அளவற்ற கருணையினுல் இவ்வுலகத்தையும், அதிலுள்ளவைகளையும் மக்கள் அனைவரும் அனுபவிப்பதற்காகக் கொடுத்திருந்தும், மனுக்குலத்தின் தன்னலமும். பேராசையும் அவற்றை ஒரு சிலரே அனுபவிக்கும்படியாகச் செய்து, கடவுளின் நோக்கத்தைக் கெடுத்துவிடுகின்றன.

பெரும்பான்மையான ஆசிய மக்களிடையே காணப்படும் வறுமை, பசி, நிலமில்லாமை, ஏற்றத்தாழ்வு இவற்றைச் சிந்தித்துப் பாருங்கள். தம்முடைய தனிப்பட்ட வேண்டுதலும் ஆலய வழிபாடும்கூட இன்றைய உலகில் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் காணப்படும் முடிவில்லாத இப்போராட்டத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

'இயேசுகிறிஸ்து உலகின் உயிர்.' என்ற பொருளே கனடாவிலுள்ள வான்கூவரில் இந்த வருடம் ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் உலகத் திருச்சபை மாமன்றத்தின் ஆருவது மகாநாட்டிற்குரிய கருப்பொருளாகும்.

ஆண்டவர்மேல் நமக்கிருக்கும் இந்த உரிமையே. திருச்சபையின் விசுவாசத்திற்கு அடிக்கல்லாகவும், இருபது நூற்றாண்டுகளாக சபையின் நம்பிக்கைக்கும. வாழ்வுக்கும், வழியாகவும இருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா மக்களுடைய நம்பிக்கைக்கும், வாழ்க்கைக்கும் இயேசுகிறிஸ்து ஒரே நிச்சயமான, நிரந்தரமான ஆதாரமாக இருக்கிருர் என்பதை உலகிற்குத் தாழ்மையோடும், நன்றியோடும அறிவிக்கிறேம்.

அரிசி கிடைக்காத மக்கள் எவ்வாறு இயேசுகிறிஸ்து தங்கள் வாழ்க்கைக்கு அரிசி என்பதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? இந்தச் சூழ்நிலையில இயேசு கிறிஸ்து நமவாழ்க்கையின உயிர் என்பதை அறிக்கையிடும்போது, நம்மீதும திருச்சபையின் மீதும் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் யாவை சிந்தியுங்கள்!

### "சுமை தாங்கி"

கிறிஸ்தவர்கள் மத்தியில் தரமான மாதப் பத்திரிகையில்லையே என்ற குறையை நிவிர்த்தி செய்யும் வண்ணமாக "சுமை தாங்கி" என்னும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தலைசிறந்த கிறிஸ்தவ எழுத்தாளரும், நகைச்சுவை எழுத்தாளருமான ரீ. பாக்கியநாயகம் இதன் ஆசிரியர்.

1983-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வெளிவந்த இதன் முதலாவது தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது.

"உலக மக்களது பாவச் சுமைகளைச் சுமக்க வந்த "சுமை தாங்கி"யாம் இயேசு நம் மத்தியில் இன்றும் ஜீவிக்கிருர், அவரது அந்த ஜீவத்தொனி — அன்பின் அழைப்பு. இப்பத்திரிகையின் பக்கங்களுக்கூடாக நம்மனைவருக்கும் கேட்டு எம்மை ஆண்டவர் பக்கம் திருப்புவதாக."

இந்த நன்னோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை, விரைவில் மாதமிருமுறைப் பத்திரிகையாகவும், வாரப் பத்திரிகையாகவும் மலரும் என நாம் திடமாக நம்பலாம். இந்த இதழ்களுக்கு சாது சுந்தர் சிங் சகோதரன் தினகரன் வண. டிக். சஸ்டின் போன்ருேரது சிந்தனைகள் மணமூட்டுகின்றன. வானவில், வேத அறிவுப் போட்டி. வெண்பாப் போட்டி முதலியன வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுவனவாக இருக்கின்றன. ஞாயிறு ஆராதனைக்கு வரமுடியாமைக்குரிய 21 காரணங்களை நகைச்சுவை ததும்ப எடுத்துக் கூறுகின்ருர். தேவகிருபை இயேசுவடியான், இப்படியாகச் சிரிக்கவும் சிந்திக்கவும் அனேக விஷயங்களைத் தாங்கி ஒரு கிறிஸ்தவ பத்திரிகை வெளிவருவது பெருமையை அளிக்கின்றது.

இப்பத்திரிகையின் விலை மூன்றரை ரூபா எனப் போடப்பட்டுள்ளது. சந்தாதாரர் தொகை அதிகரித்து விளம்பரங்களும் கிடைத்தால் பத்திரிகை மேலும் சிறப்படைய வழியுண்டு. இப்பத்திரிகையின் வளர்ச்சி தமிழ்க் கிறிஸ்தவர்களின் கரத்திலேயே இருக்கின்றது.

— எஸ். ஜெயநேசன்.

## தூய ஆவியானவரின் பிரசன்னம்

புதிய ஏற்பாட்டில் தூய ஆவியானவரின் பிரசன்னத்தையும், திருச் செயல்களையும் குறிப்பதற்காக, முக்கிய பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனைச் சிந்தித்துத் தியானியுங்கள்.

1. பிறத்தல்: (யோ. 3: 5, 6.)
2. வாசம் பண்ணுதல்: (II திமோ. 1:14; ரோ. 8:11).
3. முத்திரையிடுதல்: (II கொ. 1: 22; எபே. 1:13; 4: 30).
4. அச்சாரம்: (II கொ. 1:22; எபேசி. 1:14).
5. அபிஷேகம் செய்தல்: (II கொ. 1:21; I யோ 2:27).
6. நிரப்புதல்: (லூ. 1:15, 41, 67; அப். 4:8, 17; எபே. 5:18)
7. ஞானஸ்நானம் பெறுதல்: (மத். 3: 11; அப். 1:4; I கொ. 12:13)

மேற் குறிக்கப்பட்ட ஒவ்வொரு பதத்திலும் தனி முக்கியத்துவமுண்டு. வேத வசனங்களைப் படித்துச் சிந்தியுங்கள்.

தேற்றரவாளன்

யோ. 16:13, 14ஆம் வசனங்களில் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனைப் பற்றித் தெளிவாகக் கூறப்படுகிறது. கீழே தரப்பட்டுள்ள விவரங்களைக் கவனியுங்கள். இவை தூய ஆவியானவரின் ஆள்தத்துவத்தை சந்தேகமற நிரூபிக்கின்றன.

1. அவர் வருகிறார்
2. அவர் நடத்துகிறார்
3. அவர் கேட்கிறார்
4. அவர் பேசுகிறார்
5. அவர் எடுக்கிறார் } யோ. 16:13.
6. அவர் அறிவிக்கிறார்
7. அவர் மகிமைப்படுத்துவார் } யோ. 16:14.

இந்த ஏழு திருச்செயல்களையும் நடப்பிக்கிற தூய ஆவியானவர் ஆள் தத்துவமுடையவர் என்பது தெளிவு. அல்லவா?

## தூய ஆவியைப் பற்றிய திருமறை விளக்கம்

"பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்; பொதுவான பரிசுத்த கிறிஸ்தவ சபையும். பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவ மன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன்."

### இதன் விளக்கம் என்ன?

நாம் எங்கள் சுயபுத்தியினாலாவது, சக்தியினாலாவது இயேசு பெருமானை விசுவாசிக்கவும், அவரிடம் இணைந்து வாழவும் முடியாது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர், நற்செய்தியைக் கொண்டு எங்களை வரவழைத்துக் கூட்டிச் சேர்த்து, ஒளிரச்செய்து, மெய்விசுவாசத்தினால் எங்களைத் தூய்மையாக்கிக் காப்பாற்றி வருகிறாரென்பதே எங்கள் விசுவாசம்.

இப்படியே அனைத்துலகத் திருச்சபையையும் வரவழைத்து ஒன்று கூட்டி ஒளிரச்செய்து, தூய்மையாக்கி, ஒரே மெய் விசுவாசத்தில் இயேசுவுடன் இணைந்து வாழச் செய்கிறார். இந்தத் திருச்சபையில் எங்களுக்கும், விசுவாசமுள்ள அனைவர்க்கும் நாள்தோறும் பாவங்கள் அனைத்தையும் கிருபையாய் மன்னித்து, இறுதி நாளில் எங்களையும் மறுமைக்குள் ஏகிய அனைவரையும் ஒன்று சேர்த்து, இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கிற அனைவர்க்கும் முடிவில்லாத வாழ்வை அளிப்பார் என்பது நிச்சயம்.

### நமது விசுவாசத்தில் தூய ஆவியானவரின் உதவி என்ன?

இதனைத் தூய ஆவியானவர் நற்செய்தி மூலமாய்ச் செய்கிறார். அதாவது, கிறிஸ்பெருமானின் வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் இவற்றின் மூலமாக, இறைவன் தங்களுக்காக என்ன செய்துளார் என்னும் செய்தியை மனுமக்கள் கேட்கும்போது, இச் செய்தியை அவர்கள் விசுவாசித்து இயேசுவில் நம்பிக்கை வைக்கும் படி தூய ஆவியானவர் நமக்கு உதவியளிக்கிறார் என்பதே.

### 'விசுவாசிப்பது' நம்மால் செய்யமுடியாதாயின், தூய ஆவியானவர் இதனை எவ்விதம் செய்யக் கூடும்?

தூய ஆவியானவர் மெய்யான கடவுள். மனிதர் விசுவாசிப்பதற்கு அவர்களுக்கு உதவி புரிய அவர்களுடைய இதயங்களில் செயலாற்றி வருகிறார். விசுவாசிக்கும்படி அவர் மனிதரைக் கட்டாயப்படுத்துகிறதில்லை. ஆனால் அவர்கள் விசுவாசிக்க இயலும்படி செய்கிறார்.

### மனிதர் இயேசுவில் விசுவாசம் வைக்கும் போது, அவர்களில் காணப்படும் மாறுதல்கள் என்ன?

இயேசுவே தங்கள் மீட்பர் என்று விசுவாசிக்கிற மக்கள் அவருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறார்கள். இயேசு தங்கள் மீட்பர் என்றும், ஆண்டவர் என்றும் அறிந்து அவருக்குக் கீழ்ப்படியவும் விரும்புகிறார்கள். இறைவனுக்குப் பயந்து அவரில் அன்பு கூருவது என்பதின் கருத்தை இப்போ அறிவார்கள். எனவே, பத்துக் கற்பனைகளில் அடங்கிய இறைச் சித்தத்திற்கு ஏற்க வாழ முயலுவார்கள்.

### இது உண்மையானால் கிறிஸ்தவர்கள் ஏன் பரிபூரணராய்த் திகழுவதில்லை?

கிறிஸ்தவர்கள் இயேசு பெருமானுக்கு ஊழியஞ் செய்ய விரும்பினாலும், அவர்களுக்குள்ளே கெட்ட ஆசைகளும் பாவங்களும் இன்னும் இருக்கின்றன. ஆகவே நாள்தோறும் அவர்கள் மன்னிக்கப்படவும் புதுப்பிக்கப்படவும் வேண்டும். இதனை, தூய ஆவியானவர் நற்செய்தியின் மூலமாக அவர்களுக்குள் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

இயேசுவின் மூலமாக நம்மை மீட்டு, நாம் விசுவாசத்தில் உறுதி பெற தூய ஆவியின் மூலமாக நமக்குத் துணை செய்துள்ள கடவுள் தான் அனைத்தையும் படைத்து நம்மைக் காத்துவரும் எல்லாம் வல்ல இறைவன்.

## தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் பக்தித்திறன்

V. M. சம்மனசு
(முற்றெடர்ச்சி)

"பாரும் படிப்பு நீ; பாக்கியம் நீ;
வாக்கியம் நீ
தேடும் இருபொருளும் செல்வமும் நீ;
வீடது நீ!
கட்டும் அரண்மனையும் கற்போதித்த
பொற்றானும்
மட்டுப் படாத கொலு மண்டபமும்
திட்டவட்ட
மான படையும் பவிசும் அட்ட
சம்பத்துக்களும்
தானந் தரும நீ; சகலமும் நீ; ஞானமுநீ—

என்னும் வரிகளிலே அவர் இறைவனையே எல்லாமுமாகக் கருதி வாழ்ந்தமை புலனாகும். இதனையே மேலும்,

"துக்கத்தி லாறுதல்என் வாழ்வில் களிப்புநீ
துன்பத்தில் எனதின்ப நீ
தொழுவும் வேலையின் அறவன் பகலில்
என் சிந்திப்பு
தூக்கத்தில் என் சொற்பனம்
பக்கத்தி ராவினில் அடைக்கலம் இருளதிற்
பகவத் நீ எனது சத்தி
படுகுறையில் ஐசுவரியம் கசப்பினில்
அமுது
பல தாழ்வில் எனது வாழ்வு.

என்றெல்லாம் விரித்துரைக்கிறார் இறுதி வேளையிலும் இறைவனை எண்ணி, அவர் கைகளிலேயே இறக்கும்பேறு கோரும் உருக்கத்தைப் பாருங்கள்:

"என்முச் சொடுங்கும் அந்தக்
கடையிக் கட்டிலும்,
நீர் எனக் காயிறந்த உருவாகக்
காண்பியும்;
அப்போ நான் உமைப்பார்த்துக்
கண்நோக்கி நெஞ்சிலே
அணைத்துக் கொண்டும் காத்துத்
தூங்கட்டும் இயேசுவே!

இறைவன் அடிமலரையே இடைவிடாது எண்ணி வாழ்ந்தவர் என்பதற்கு இதனினும் வேறென்ன சான்று வேண்டும்?

சாஸ்திரியார் வேதாகம நூலறிவில் ஊறித் திளைத்தவர். மறைநூற் கருத்துக்களைத் தம் கவிதைகள் எங்கணும் மணிகள் போல அழுத்திப் பதித்து அழகூட்டியிருக்கின்றார் கிறிஸ்துவின் மானுடப் பிறப்பை,

"கனி விளை யடவே, அனைமரி யிடமே
கடவுளர் வந்து பிறந்தாரே!
"இத்தனைத் தவமாய் நித்திய பரனார்
ஒருசாரி பிறந்தாரே
நல்கு நீதி மெல்கிசேதேக்
கே ஆசாரி பிறந்தாரே—என்கிறார்.

கிறிஸ்து பிறந்த பெத்தலகேம் மகிமையினைப் பாடுங்கால், அங்கு

"வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள்
படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம்
அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் மூல்லைநிலத் தலைவர் வந்து
தொழுவார்
நட்சத்திர சாஸ்திரிகள் காணிக்கைகள்
தருவார் —

என வேதாகம வாக்குகளைக் குறிக்கின்றார்.

"சிஷ்டியோ, அல்லது நீ சிஷ்டிகரோ,
செம்மறியின்
குட்டியோ, மேய்க்கின்ற கோனோ,
குறுநீதியே

என வினவுவார் போல வியந்துரைக்கின்றார்.

"குன்று பிளவாதோ, கொல்கதாக்
கொடு முடி சாயாதோ —
தேவாலயத்
தொங்கும் திரையதுவுங் கிழிந்(து)
இரண்டு துண் டாகாதோ — எனக்

கிறிஸ்துப் பெருமான் மரிக்குங்கால் நேர்ந்த நிகழ்ச்சிகளை எதிர் நோக்கிச் சீயோன் மகள் புலம்புவதாக அமைக்கின்றார்.

"தேவ சுதனை வேண்டடா — மிகுந்
தேவ பத்தியில் மூண்டடா
சீவ விளக்கைத் தூண்டடா — மாயச்
செகத்தைக் கடந்து தாண்டடா"
"வான வரங்கள் வாங்கடா — சாலமோன்
மண்டபத்திலே தூங்கடா
ஈன மனத்தை நீங்கடா — செபத்(து)
இடைவிடாமலே ஓங்கடா
"மானு வேலைத் தினம் பணியடா —செப
மாலை கொண் டுவந்தங் கணியடா"
ஞான மனத்தினைத் தணியடா — முழு
ஞாலத்தையும் விடத் துணியடா
— என்னும்

அடிகளிலே உள்ளார்ந்த "மெய்ப் பொருளை"யும் மறை நூற் "குறியீடு"களையும் காணலாம். பாரதியார் பாடல்களின் "சாயலை"யும் இவற்றிலே பார்க்கிறோமே! ஆனால் பாரதியார் பிறக்கக் கூட இல்லை. சாஸ்திரியார் இறக்கும் வரையில்!

எளிய உண்மைகளை இனிதாகக் கூறி விடுகிறார்,

'காதுள்ள போதே தூற்றிக்கோ — இரு
கண்ணுள்ள போதே தோற்றிக்கோ
ஊற்றுள்ள போதே இறைத்துக்கோ—திரு
உரையுள்ள போதே நிறைத்துக்கோ

என்று. குழந்தைகளுக்கான தாலாட்டுப் பாட்டிலும் முதலாய் மறை உண்மைகளைப் பொதிந்துள்ளார்!

"நித்திரை செய் தெள்ளமிர்தே நேசமுறும்
பைங்கிளியே
சித்திரைப்பூங் காவனத்திற் சென்றுலவும்
கோகிலமே"

"பார்ப்பார் உனைத்தயவாய்ப்
பார்த்துனது துக்கமெலாம்
தீர்ப்பார் உனக்குத் தினந்தினமும்
நன்மை செய்வார்"

"நன்மை செய்வார் தேற்றரவின்
நல் ஆவியைத் தருவார்
துன்மை பெல்லா நீக்கிச் சுகத்திலுனை
ஆதரிப்பார்

"தஞ்சமுண்டு காவலுக்குச் சம்மனசுண்டு
ஏசுவுடை
அஞ்சு காயத்திலுடை
அடைக்கலமுண்டேந் நாளும்"

மேலே துன்மை - என்றிருப்பது, தின்மை என்பதற்கு இணையான சொல். துன்மார்க்கம், துற்புத்தி. துர்ப்பாக்கியம் என்பவற்றில் வரும் "துர்" என்னும் வடமொழி முன்னொட்டு (Prefix) சொல்லைக் கொண்டு, "சுகத்தில்" எனப் பின்னர் வரும் சொல்லுக்கு மோனையாக அமைந்திருப்பது இனிக்கும் கருத்தாகும்.

### எண்ணம்

உன் வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப் பார். நீ உனக்காக வாழ்ந்த நாட்கள் பலவற்றை நிச்சயமாகக் காண்பாய். ஆனால் பிறருக்கென்று நீ எத்தனை நாட்களை அர்ப்பணித்திருக்கின்றாய்?... எண்ணிச் சொல்ல உன்னால் முடியுமா?

என்று நீ தற்பெருமைக்கு இடம் கொடுக்கின்றாயோ அன்றே உனது வீழ்ச்சி ஆரம்பமாகிறது.

— அருள் தந்தை P. A.

### எழுதுவோர் கவனத்திற்கு!

நீங்கள் எழுதும் கட்டுரைகள், புதினங்கள் கடிதங்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

ஆசிரியர்
உதயதாரகை அலுவலகம்
குருமனை
மானிப்பாய்.

*EDITORIAL*

## Believing in the Good News

A modern experiment in Evangelism reported from some developed countries is the "Church in the Market Place".

We read that in the eastern suburbs of Sydney, more specifically at the Bondi Junction Plaza Complex, is such a Church built with the noble ideal that a Church should be physically and spiritually "where the people are".

But the experiment had its own risks, one of which was that some youth complained that the 'Church in the market place' was not fulfilling its mission. The poor, the unemployed, the drug addicts, the alcoholics found its 'atmosphere' repelling. It had "a smooth image", with its coffee-shops, its well furnished auditorium, and plush offices for the Ministers of the Church to meet their "parishioners".

There are, of course, risks and opportunities in any missionary outreach. The presence of the 'Church in a market place' would be a reminder to many that there are other goals in life worthier than increased profits.

The Week of Evangelism of the JDCSI should, however, remind us of the realities of the Christian Church in Asia where the disintegrative influence of the western "individualistic ethic" is still a blot on the basically community-oriented nature of the Asian family.

If the drama of Asian society is the struggle for social justice, then we have to be extremely vigilant that our Churches in Asia do not project "a smooth image".

A shopping plaza, complete with a Church in its premises may be an attractive phenomenon in Asian countries. But it will have little relevance to a people who, according to the Regional Representative for Asia and the Far East of the FAO never quite make the 1000 calorie level in their food while their counterparts in the West consume a staggering 3300 calories every day.

The 'scandal of hunger' in Asia is not, as we know, an economic problem. It has been established, beyond any doubt that there is enough food to feed everyone in the world adequately (with 3000 calories a day per person) if those who need it had the means to buy it or the means to profit by the improvements undertaken to increase production. The 'scandal' is a political problem.

Political conditions in Asia, for example, favour now modernisation on a large scale of agriculture to make the countries self sufficient in food. But what is often forgotten is that the new techniques only profit those who already possess land, money and political clout. These who really need the improvements do not have the means to profit by them.

The problem in Asia is the problem of challenging and changing dehumanising structures and freeing man from the inadequacies and inhibitions which shackle him and give him "the courage to be".

As used by Jesus, the Kingdom of God does not mean a place ruled over by God but a place through which God shows himself actively to be King.

Evangelism is not an easy task in Asia today. Most societies are changing so radically that it is impossible to keep, abreast of the changes. The Christian Church in Asia should try to understand 'people' — why they act as they do, what they understand as truth and reality, and why they give themselves to what they do.

Ezekiel "sat where they sat, and was astonished". The Christian Church in Asia should pay this price if people are to believe 'the good news' we proclaim.

---

*Foreign News*

**Mahadeva Memorial Meeting**

A meeting was held at Tyler's Hall, Kingsbury High School, London on 9-4-83 to commemorate the Life and work of Mr. Rajasingham Mahadeva who was the Secretary of the Standing Committee of Tamil Speaking People (Scot) at the time of his death.

Mr. Mahadeva was a Professional Engineer, attached to Eastern GAS where he was employed at the time of his death.

**Mr. Angelo Rajakariar of Cleveland Avenue, London**

Mr. Angelo Rajakariar (72) who was, while in Sri Lanka, the Chief Adult Education Officer in the Southern and Eastern provinces left for UK in 1963, having retired prematurely and was Head of the English Department in Richard Chaloner School, Surrey.

Angelo who was an Old Boy of St. Patricks College, Jaffna and St. Jaseph's College, Colombo was a devout Roman Catholic and spent a lot of time in church activities. He was an indefatigable worker in the Legion of Mary and died while living for the church.

From *Tamil Times.*

---

*IN BRIEF*

O According to some news reports, foreign physicians wishing to immigrate to US on the third preference visa, and the non-immigrant medical graduates in US who wish to apply for permanent residency will find it more difficult due to new examinatoi that will come into effect from July next year.

## Pentecost 1983

**Message from the Presidents of the World Council of Churches**

Through the centuries Christians have confessen the Holy Spirit as "the Lord and giver of life".

At creation, when "the earth was without form and empty, and darkness was upon the face of the deep, the Spirit of God moved over the face of the waters" (Genesis 1:2). It was through the Spirit that God created light and life, and above all humanity, male and female, for good.

When the people of Isrel lost their way through disobedience or were in danger from outside powers, it was the Spirit who spoke and acted through those open to its discernment and power.

It was to the believing heart of Mary that the announcement was given that light and life would become incarnate in her womb — Jesus Christ, the Son of God our Saviour.

It was in the Spirit that Jesus began his ministry in baptism and in proclaiming good news to the poor and liberty to the oppressed.

At Pentecost, as the disciples gathered in prayer waiting for the promise made by the risen Christ, the Spirit came upon them and renewed their life, and opened their lips to proclaim the word of life, which was received by the multitude. The Church was born and went forth to witness to life as a gift from God in Christ to the world.

Once more, at Pentecost the Church and Christian people everywhere are called to affirm joyfully the Spirit both as the source and resource of their life and being, and of that of the world. This year we do so with special emphasis, because the theme for the Sixth Assembly of the World Council of Churches meeting in Vancouver, Canada, on July 24 — August 10, will be "Jesus Christ — the Life of the world". We remember that Jesus said: "I am come that you may have life, and have it in all its fullness" (John 10:10). He also told his disciples: "It is the Spirit that gives life, the flesh is of no avail; the words that I have spoken to you are Spirit and life" (John 6:63).

Today the forces of death seem overwhelming and threaten the very survival of human beings and of creation itself. Creation is in danger of returning to formless chaos, emptiness and darkness, through wars and possible nuclear annihilation. So many people feel empty because they lack the very means to be alive. So many others feel empty because they have so much and are so little. So many have lost a sense of meaning in life, and spread meaninglessness around them by their acts and words of violence and death.

It is in such a world that the Church is called to proclaim in word and deed that God in Christ has filled our emtiness with life in the Spirit. It is by the Spirit that we who are divided by race, sex, class, religion and culture, are baptized into one living Body of Christ, sharing the varied gifts of God, especially the gift of love (1 Cor. 12 — 13). And it is this gift of love which fills our life with meaning and purpose.

So, as we make our pilgrimage in the Spirit in every place and to the Assembly of the member churches at Vancouver, may we walk in the Spirit as we live by the Spirit in unity and love; sharing all that we are and have for the healing of the nations in peace and justice, and in fullness of life.

## University Admissions

The University Grants Commission hopes to finalise admissions by June 30. The delay, according to the Commissioner of Examinations, is due to the unusually large number who applied for rescruting — a staggering 20,000.

The number of places available in the seven universities is *5345*. The number who have qualified is *26,833*. Last year 67.9 per cent of the qualified students applied for admission. On this basis, about 18,220 are expected to apply this year. The largest number to qualify is in the Commerce faculty where 1372 have qualified.

## Composition of Parliament

With the UNP winning 14 out of the 18 parlimentary seats at the by-election on 18-5-83, the composition of the 168-member House will be as follows:-

UNP - 139 (excluding speaker); TULF - 16; SLFP - 9; CWC - 1; CP - 1; MEP - 1.

The by-elections were held following the resignations of members of the UNP who did not secure a majority for the party at the Presidential Election in October 1982 and the Referendum in December 1982.

Four setting members retained their seats - Dr. Ranjit Atapattu (Beliatta); Mr. Jinadasa Weerasinghe (Tangalle), Mr. V. L. Wijemanne (Kalutura) and Dr. P. M. B. Cyril (Tisjamaharama).

## Peradeniya Campus Probe

A Committee has been appointed to probe the recent communal incidents at the Peradeniya University. The following constitute the team:—

Mr. Kenneth Laserolle (chairman), Mrs. T. K. Ekanayake (Principal, Girls' High School, Kandy) and Dr. D. Karinaidu a research scientist.

The Committee is expected to submit its report in two weeks. This is the first occasion perhaps, when the disturbances at the Peradeniya Campus took on a communal hue.

---

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 20th May 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.